# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2002 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பற்றுக்கள் வரிச் சட்டம்

---

(2002, ஓகத்து மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

2002, ஓகத்து மாதம் 23 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 21.25 தபாற் செலவு : ரூபா 6.75

# 2002 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க,
# பற்றுக்கள் வரிச் சட்டம்

[2002 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ. — ஓ. 22/2002
4692

**வர்த்தக வங்கிகளில் உள்ள குறித்தசில கணக்குகளிலிருந் தான பற்றுக்கள் மீதும் அத்துடன் வைப்புச் சான்றிதழ்களை யும் பிரயாணிகளின் காசோலைகளையும் பணமாக மாற்றுவதன்மூலம் தேறும் பணத்தொகைகள் மீதும் வரி யொன்றை விதிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான தொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

1. இச்சட்டம் 2002 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பற்றுக்கள் வரிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

2. பதின்மூன்றாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய — பற்றுக்கள் வரி விதிப்பனவு.

(அ) வர்த்தக வங்கியொன்றில் பேணப்படும் நடைமுறைக் கணக்கு ஒவ்வொன்றிற்கும் எதிராக ஒவ்வொரு பஞ்சாங்க மாதத்திலும் செய்யப்பட்ட பற்றுக்களின் மொத்தத் தொகைமீதும் ;

(ஆ) வைப்புச் சான்றிதழொன்றை அல்லது பிரயாணி களின் காசோலையொன்றை காசாக மாற்றுவதன் மூலம் தேறும் தொகையொன்று மீதும்,

விடயத்திற்கேற்ப மொத்தப் பற்றுத்தொகையின் அல்லது பணமாக மாற்றப்பட்ட தொகையின் ஒரு நூற்றுவீதத்தின் பத்திலொன்று என்ற வீதப்படி பற்றுக்கள் வரி என அழைக் கப்படவேண்டிய வரியொன்று விதிக்கப்படுதலும் அறவிடப் படுதலும் வேண்டும்.

3. இரண்டாம் பிரிவின்கீழ் சுமத்தப்படும் பற்றுக்கள் வரியானது — வரிக்கான பொறுப்பு.

(அ) வர்த்தக வங்கியொன்றில் பேணப்படும் நடைமுறைக் கணக்கொன்றிலிருந்தான பற்று ஒன்றின் விடயத்தில், எந்த ஆளின் அல்லது ஆட்களின் பெயரில் அக்கணக்குப் பேணப்படுகின்றதோ அந்த ஆளினால் அல்லது ஆட்களினால் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(ஆ) வைப்புச் சான்றிதழொன்றைக் காசாக மாற்றுவதன் மூலம் தேறும் தொகையொன்றின் விடயத்தில், சான்றிதழை வைத்திருப்பவரால் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(இ) பிரயாணிகளின் காசோலையொன்றைக் காசாக மாற்றுவதன் மூலம் தேறும் தொகையொன்றின் விடயத்தில், எந்த ஆள் பிரயாணிகளின் காசோலையைக் காசாக மாற்றுவதற்கென முன்வைக்கின்றாரோ அந்த ஆளினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

பற்றுக்கள் வரி செலுத்துவதற்கான பொறுப்புத் தொடங்குதல்.

**4.** பற்றுக்கள் வரி செலுத்துவதற்கான ஆளொருவரின் பொறுப்பானது —

(அ) வர்த்தக வங்கியொன்றில் பேணப்படும் நடைமுறைக் கணக்கொன்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பற்று ஒன்றின் விடயத்தில், பற்று செய்யப்பட்ட மாதத்தின் முடிவில் தொடங்குதல் வேண்டும் ;

(ஆ) வைப்புச் சான்றிதழொன்றை அல்லது பிரயாணிகளின் காசோலையொன்றைக் காசாக மாற்றுவதன் மூலம் தேறும் தொகையொன்றின் விடயத்தில், அவ்வாறு காசாக மாற்றுவதன்மீது உடனடியாகத் தொடங்குதல் வேண்டும்.

பற்றுக்கள் வரியைச் சேகரித்து அனுப்புவதற்கு நிதி நிறுவனங்களுக்குள்ள பொறுப்பு.

**5.** ஒவ்வொரு வர்த்தக வங்கியும், விசேட வங்கியும், நிதிக் கம்பனியும் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியும் நடைமுறைக் கணக்குக் கொடுக்கல் வாங்கல்களினின்றும், வைப்புச் சான்றிதழ்களையும் பிரயாணிகளின் காசோலைகளையும் காசாக மாற்றுவதினின்றும் எழுகின்ற பற்றுக்கள் வரியைச் சேகரிப்பதற்கும் அத்துடன் அதனை இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அனுப்பி வைப்பதற்கும் பொறுப்புள்ளதாதல் வேண்டும்.

பற்றுக்கள் வரியைச் சேகரித்தலும் அனுப்புதலும்.

**6.** (1) வர்த்தக வங்கி ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாதத்தின் தொடக்கத்திலும் அவ்வங்கியில் பேணப்படும் நடைமுறைக் கணக்கு ஒவ்வொன்றிலுமிருந்து முற்போந்த மாதத்தில் அக்கணக்கிலிருந்து பற்றுக்கள் வரியாகச் செலுத்தப்பாற்பாலதான பணத்தொகைக்குச் சமமானவொரு பணத்தொகையை மீளப்பெற்று ஒவ்வொரு மாதத்தினதும் கடைசி வேலை நாளன்று அல்லது அதற்குமுன்னர் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அத்தகைய பணத்தொகையை அனுப்புதல் வேண்டும் :

ஆயினும் ஏதேனும் மாதத்தின் ஆரம்பம் வேலையில்லாத நாளொன்றில் வருமாயின், அத்தகைய மீளப்பெறுதலானது அதன் பின்னரான முதலாவது வேலை நாளில் செய்யப்படலாம் :

ஆயினும் மேலும் குறிப்பிட்ட ஒரு மாதத்தின்போது நடைமுறைக் கணக்கொன்றின் வரிப்பொறுப்பானது பத்து ரூபாவுக்குக் குறைவாக இருப்பின் பற்றுக்கள் வரியானது நடைமுறைக் கணக்கிலிருந்து மீளப் பெறப்படுதலாகாது.

(2) ஒவ்வொரு வர்த்தக வங்கியும், விசேட வங்கியும், நிதிக் கம்பனியும் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியும் வைப்புச் சான்றிதழொன்று அல்லது பிரயாணிகளின் காசோலையொன்று காசாக மாற்றப்படுவதன்மீது அவ்வாறு காசாக மாற்றுவதன்மூலம் தேறிய தொகையிலிருந்து அத்தகைய தொகையின்மீது செலுத்தப்பட வேண்டியதான பற்றுக்கள் வரிக்குச் சமமான பணத்தொகையொன்றைக் கழிப்பனவு செய்தல் வேண்டும் என்பதுடன், வைப்புச் சான்றிதழ் அல்லது பிரயாணிகளின் காசோலை காசாக மாற்றப்பட்ட மாதத்தை யடுத்துவரும் ஒவ்வொரு மாதத்தினதும் கடைசி வேலை நாளன்று அல்லது அதற்குமுன்னர் அத்தகைய பணத் தொகையை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதலும் வேண்டும்.

(3) ஏதேனும் பணத்தொகையானது பற்றுக்கள் வரியின் கொடுப்பனவில் (1) ஆம் உட்பிரிவின்கீழ் மீளப்பெறப்பட்டு அனுப்பப்படுமிடத்து அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் கழிப்பனவு செய்யப்பட்டு அனுப்பப்படுமிடத்து, அத்தகைய கொடுப்பனவு, விடயத்திற்கேற்ப எந்த ஆளின் அல்லது ஆட்களின் பெயரில் அல்லது பெயர்களில் வர்த்தக வங்கியில் நடைமுறைக் கணக்கு பேணப்படுகின்றதோ அந்த ஆளின் அல்லது ஆட்களின் அல்லது வைப்புச் சான்றிதழ் வைத்திருக்கும் ஆளின் அல்லது எந்த ஆள் பிரயாணிகளின் காசோலையைக் காசாக மாற்றுவதற்கென முன்வைக்கின்றாரோ அந்த ஆளின் அதிகாரத்துடன் செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், 10 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக பற்றுக்கள் வரி செலுத்துவதற்கான அவ்வாளின் பொறுப்பின் செல்லுபடியான நிறைவேற்றுகையாகவும் இருத்தல் வேண்டும்.

(4) நடைமுறைக் கணக்கில் நிதி இல்லாதிருப்பதன் காரணமாக அல்லது நடைமுறைக் கணக்கொன்றில் நிதியின் போதாமை காரணமாக அத்தகைய கணக்கு பேணப்படும் வர்த்தக வங்கியானது, உடனடுத்து வரும் மாதத்தில் அத்தகைய கணக்கிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பற்றுக்களின் மீது செலுத்தப்படற்பாலதான பற்றுக்கள் வரி முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தைச் சேகரிக்க இயலாதிருக்குமிடத்து, வங்கியானது எந்த ஆளின் அல்லது ஆட்களின் பெயரில் அல்லது பெயர்களில் கணக்கு பேணப்படுகின்றதோ அந்த ஆளின் பெயரையும் முகவரியையும் அல்லது அந்த ஆட்களின் பெயர்களையும் முகவரிகளையும் உடன் முன்னரான மாதத்தில் அக்கணக்கில் இருந்து மேற்கொள்ளப்பட்ட பற்றுக்களின் மொத்தத் தொகையையும் அத்தொகையின்மீது செலுத்தப்படற்பாலதான பற்றுக்கள் வரியையும், தவணைதவறுகையானது இடம்பெற்ற ஒவ்வொரு மாதத்தினதும் கடைசி வேலை நாளன்று அல்லது அதற்கு முன்னர் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும் :

ஆயினும், அவ்வாறு செலுத்தற்பாலதான பற்றுக்கள் வரி இரண்டு மாதங்களைக் கொண்ட அத்தகைய காலப்பகுதிக்குள் அறவிடப்படக்கூடியதாயிருக்கும் பட்சத்தில், வர்த்தக வங்கியானது அத்தகைய அறிக்கையைச் செய்வதனை இரண்டு மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பிற்போடலாம்.

(5) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ளவை எவையும் வர்த்தக வங்கியொன்றில் பேணப்படும் ஏதேனும் நடைமுறைக் கணக்கிலுள்ள நிதியத்திலிருந்து, அக்கணக்கிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பற்றுக்களின் மீது பற்றுக்கள் வரி செலுத்தப்பட வேண்டும் என்ற ஏதுவின் மீது மட்டும், எந்த ஆளின் அல்லது ஆட்களின் பெயரில் அல்லது பெயர்களில் கணக்கு பேணப்படுகின்றதோ அந்த ஆளின் காசோலையால், உண்டியலால், கட்டளையால் அல்லது வேறு அறிவுறுத்தலால் எந்தக் கொடுப்பனவு கோரப்படுகின்றதோ அந்தக் கொடுப்பனவின் தொகை முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தை செலுத்த மறுப்பதற்கு அதிகாரமளிப்பதாகக் கருதப்படுதலாகாது :

ஆயினும், எவ்வாறாயினும், ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்புவதற்கு வருமதியாகவுள்ள பற்றுக்கள் வரியின் ஏதேனும் தொகை, அத்தகைய காசோலையின், உண்டியலின், கட்டளையின் அல்லது அறிவுறுத்தலின் கொடுப்பனவுக்கு முன்னர் அறவிடப்படுதல் வேண்டும்.

வங்கியினது பொறுப்பு அற்றுப்போதல்.

7. நடைமுறைக் கணக்கொன்றை வைத்திருப்பவர் இச்சட்டத்தின் நியதிகளின்படி, அவரால் செலுத்தப்படற்பாலதான பற்றுக்கள் வரியை ஈடுசெய்வதற்குப் போதியளவு நிதியை ஏற்பாடு செய்யத் தவறுமிடத்து, வங்கியானது அத்தகைய நிகழ்வை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிக்கையிடுவதன்மீது பற்றுக்கள் வரியைச் சேகரிப்பதற்கான வங்கியின் பொறுப்பு அற்றுப்போகும்.

வரிக் கழிப்பனவுச் சான்றிதழ்.

8. (1) இச்சட்டத்தின் நியதிகளின்படி பற்றுக்கள் வரியைச் செலுத்தும் ஆளொருவர், வேண்டுகோளின்மீது, அத்தகைய வரியைக் கழிப்பனவு செய்யும் ஆளிடமிருந்து "வரிக் கழிப்பனவுச் சான்றிதழ்" ஒன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட வரிக் கழிப்பனவுச் சான்றிதழானது பின்வருவன தொடர்பிலான தகவலை உள்ளடக்குதல் வேண்டும் :—

எந்தக் காலப்பகுதி தொடர்பில் சான்றிதழ் கோரப்படுகின்றதோ அந்தக் காலப்பகுதிக்கு —

(அ) விடயத்திற்கேற்ப நடைமுறைக் கணக்கொன்றிலிருந்து செய்யப்பட்ட பற்றுக்களின் மொத்தப் பணத்தொகை அல்லது வைப்பு சான்றிதழ்களை அல்லது பிரயாணிகளின் காசோலைகளைப் காசாக மாற்றுவதன்மீது பணமாகப் பெறப்பட்ட வருவாய்களின் மொத்தப் பணத்தொகை.

(ஆ) பற்றுக்கள் வரியாகக் கழிப்பனவு செய்யப்பட்ட பணத்தொகை.

(3) சான்றிதழானது, அத்தகைய தொகை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்பட்டதற்கான உறுதிப்படுத்துகையை உள்ளடக்குதல் வேண்டும்.

திரட்டுக்கள்.

9. (1) வர்த்தக வங்கியொன்று 6 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பணத்தொகைகளை அனுப்புகையில், விசேட நடைமுறைக் கணக்கொன்று தவிர்ந்த வேறு ஏதேனும் நடைமுறைக் கணக்குத் தொடர்பில் பின்வருவனவற்றைத் தரும் கூற்றொன்றை ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும் :—

(அ) முற்போந்த மாதத்தில், அவ்வங்கியில் பேணப்பட்ட எல்லா நடைமுறைக் கணக்குகளிலிருந்தும் செய்யப்பட்ட பற்றுக்களின் மொத்தத் தொகை ;

(ஆ) முற்போந்த மாதத்தில் அவ்வங்கியால் மேற்கொள்ளப்பட்ட எல்லா விசேட நடைமுறைக் கணக்குகளிலிருந்தும் செய்யப்பட்ட பற்றுக்களின் மொத்தத் தொகை ;

(இ) அம்மாதத்தில் எல்லா நடைமுறைக் கணக்குகளிலிருந்தும் பற்றுக்கள் வரியாகக் கொள்ளப் பெறப்பட்ட பணத்தொகைகள் ;

(ஈ) பன்னிரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (1) என்னும் பந்தியின் கீழும் மற்றும் 12 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழும் மீளளிப்புச் செய்யப்பட்ட பணத்தொகைகள் ;

(உ) மாதமொன்றில் ஒவ்வொரு நடைமுறைக் கணக்கிலும் விலக்களிக்கப்பட்ட பற்றுக்களினதும் மொத்தத் தொகை, இவ்வாறான நடைமுறைக் கணக்கின் மொத்தப் பற்றுக்களின் ஐம்பது சதவீதம் அல்லது ஐம்பதாயிரம் ரூபா. இவற்றுள் எத்தொகை குறைவானதோ அத்தொகையை விஞ்சுமிடத்து, 13 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் விலக்களிக்கப்பட்ட பற்றுக்கள் தொடர்பில் மீளளிப்புக் கோரிக்கையைச் செய்துள்ள கணக்கு வைத்திருப்பவர்களின் பெயர்களும் முகவரிகளும்.

(2) ஒரு வர்த்தக வங்கி, விசேட வங்கி, நிதிக்கம்பனி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி 6 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பணத்தொகைகளை அனுப்பும்போது அத்தகைய அனுப்புகையுடன் சேர்த்து பின்வருவனவற்றைத் தரும் கூற்றொன்றை ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்

(அ) விடயத்திற்கேற்ப வைப்புச் சான்றிதழை அல்லது பிரயாணிகளின் காசோலையைக் காசாக மாற்றியதன் மூலம் தேறிய தொகை ;

(ஆ) அத்தொகையின்மீது செலுத்தப்படற்பாலதான பற்றுக்கள் வரியாக அத்தொகையிலிருந்து கழிப்பனவு செய்யப்பட்ட பணத்தொகை.

பற்றுக்களின் வரியின் கொடுப்பனவில் தவணை தவறுகை.

**10.** (1) வங்கியொன்றில் எவரேனும் ஆளினால் பேணப்படும் நடைமுறைக் கணக்கொன்றிலிருந்து பஞ்சாங்க மாதமொன்றின் போது மேற்கொள்ளப்பட்ட பற்றுக்களின் மீது வருமதியான பற்றுக்கள் வரியை சேகரிக்க முடியாதிருப்பதாக 6 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் வர்த்தக வங்கியொன்று அறிக்கையிடுமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதியால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் அத்தகைய பற்றுக்கள் வரியின் தொகையை திரட்டுநிதியத்தில் வரவு வைக்கப்படுவதற்காக பணிப்புரை செய்ததிலிருந்து பதின்நான்கு நாட்களுக்குள் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துமாறு அத்தகைய ஆளைப் பணித்தல் வேண்டும். அத்தகைய ஆள் அத்தகைய தொகையை அத்தகைய பதின்நான்கு நாட்களுக்குள் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தத் தவறினால் அத்தகைய தொகையானது தவணை தவறுகையில் உள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆள் தவணை தவறியவர் ஒருவராகக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) ஒரு வர்த்தக வங்கியால், விசேட வங்கியால் நிதிக் கம்பனியால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியால் 6 ஆம் பிரிவின் கீழ் —

(அ) ஏதேனும் மாதத்தில் அந்த வர்த்தக வங்கியால் பேணப்படும் நடைமுறைக் கணக்கொன்றிலிருந்து செய்யப்பட்ட பற்றுக்களின் மொத்தத் தொகையின் மீது ; அல்லது

(ஆ) வைப்புச் சான்றிதழை அல்லது பிரயாணிகளின் காசோலையை காசாக மாற்றுவதன்மீது தேறிய தொகையின்மீது,

செலுத்தப்படற்பாலதான பற்றுக்கள் வரியாக அனுப்பப்பட்ட பணத்தொகை, விடயத்திற்கேற்ப அத்தகைய பற்றுக்களின் மொத்தத் தொகையின்மீது பற்றுக்கள் வரியாக செலுத்தப்படற்பாலதான சரியான தொகையை விட அல்லது அவ்வாறு தேறிய தொகையை விடக் குறைவாக இருக்குமிடத்து ஆணையாளர் தலைமையதிபதி, பற்றுக்கள் வரியாக செலுத்தப்படற்பாலதான சரியான தொகைக்கும் பற்றுக்கள் வரியாகச் செலுத்தப்பட்ட பணத்தொகைக்கும் இடையிலான

வித்தியாசத்தை திரட்டு நிதியத்தில் வரவுவைக்கப்படுவதற்கென அறிவித்தலின் திகதியிலிருந்து பதின்நான்கு நாட்களுக்குள் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துமாறு எழுத்திலான அறிவித்தலின்மூலம் அத்தகைய வங்கியை, நிதிக்கம்பனியை, அல்லது வியாபாரியை அல்லது பற்றுக்கள் வரி செலுத்த வதற்கு ஆளான ஆளை தேவைப்படுத்துதல் வேண்டும். அத்தகைய வங்கி, கம்பனி, வியாபாரி அல்லது ஆள் அத்தகைய பதின்நான்கு நாட்களுக்குள் அத்தகைய வித்தியாசத்தின் தொகையைச் செலுத்தத் தவறினால், அத்தகைய தொகையானது தவணை தவறுகையில் இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், விடயத்திற்கேற்ப அத்தகைய வங்கி, கம்பனி, வியாபாரி அல்லது ஆள் தவணை தவறிய ஒருவர் எனக் கருதப்படுதலும் வேண்டும்.

அறவிடு. **11.** ஏதேனும் பற்றுக்கள் வரி அல்லது அதன் ஏதேனும் பாகம் தவணை தவறியதாகவிருக்குமிடத்து ஆணையாளர் தலைமையதிபதி, தவணை தவறுகையிலுள்ள தொகை, தவணை தவறியவரின் பெயர், கடைசியாக அறியப்பட்ட வதிவிடம் அல்லது தொழிலிடம் பற்றிய விவரங்கள் அடங்கிய சான்றிதழொன்றை அத்தகைய இடம் அமைந்துள்ள பிரிவின்மீது நியாயாதிக்கம்கொண்ட நீதிவானுக்கு வழங்கலாம். அதன்மீது நீதிவான் தவணை தவறுகையிலுள்ள பற்றுக்கள் வரியின் தொகையை அறவிடுவதற்கு ஏன் வழக்கு நடவடிக்கை தொடரப்படக்கூடாது என்பதற்குக் காரணங்காட்டுமாறு தவணைதவறியவருக்கு அழைப்பாணை விட்டழைக்கலாம் என்பதுடன், போதுமான காரணம் காட்டப்படாவிடின் அத்தகைய தவணைதவறியவர்மீது நீதிவானால் விதிக்கப்பட்ட ஒரு குற்றப்பணம் என்றாற்போன்று தவணை தவறுகையிலுள்ள பற்றுக்கள் வரியின் தொகை நீதிவானின் கட்டளையின்மூலம் அறவிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அறவிடப்பட்டதும் திரட்டு நிதியத்தினால் வரவுவைக்கப்படுவதற்கென ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்படுதலும் வேண்டும்.

மீளளிப்புக்கள். **12.** (1) பொறுப்புடைய தொகையை விஞ்சியதாகச் செய்யப்பட்ட பற்றுக்கள் வரியின் கொடுப்பனவுகள் தொடர்பில் அல்லது விலக்களிக்கப்பட்ட கணக்குகளின் பேரில் செய்யப்பட்ட வரிக் கொடுப்பனவுகள் தொடர்பில், அத்தகைய தொகை எந்த ஆளிடமிருந்து கழிப்பனவு செய்யப்பட்டதோ அந்த ஆளுக்கு பின்வருமாறு மீளளிப்புக்கள் செய்யப்படலாம்

(i) பற்றுக்கள் வரியின் கொடுப்பனவு ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்படுவதற்குமுன்னர் கணக்கு வைத்திருப்பவரால் மீளளிப்பானது கோரப்படும் விடயத்தில், வர்த்தக வங்கி, விசேட வங்கி, நிதிக்கம்பனி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அவ்வாறு கழிப்பனவு செய்யப்பட்ட மிதமிஞ்சிய பற்றுக்கள் வரியை மீளளிக்கலாம்;

(ii) பற்றுக்கள் வரியின் கொடுப்பனவு ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்பட்டபின்னர் கணக்கு வைத்திருப்பவரால் மீளளிப்பொன்று கோரப்படும் விடயத்தில், ஆணையாளர் தலைமையதிபதி, அத்தகைய கொடுப்பனவுத் திகதியிலிருந்து பன்னிரண்டு மாதங்களுள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு எழுத்தில் செய்யப்படும் உரிமைக் கோரிக்கையொன்றின்மீது, எந்த ஆளிடமிருந்து அத்தகைய தொகை அவ்வாறு கழிப்பனவு செய்யப்பட்டதோ அந்த ஆளுக்கு அவ்வாறு செலுத்தப்பட்ட பற்றுக்கள் வரியை மீளளிக்கலாம். அத்தகைய மீளளிப்பைச் செய்வதற்குமுன்னர் ஆணையாளர் தலைமையதிபதி உரிமைக் கோரிக்கையின் உண்மைத் தன்மை பற்றித் தம்மைத் திருப்திப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

(2) பதின்மூன்றாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வெளிப்படுத்துகையொன்றின் அடிப்படையின்மீது (1) ஆம் உட்பிரிவின் (i) ஆம் பந்தியின் ஏற்பாடுகளின்கீழ்ச் செய்யப்பட்ட மீளளிப்பொன்றின் விடயத்தில், எந்த வங்கிக்கு வெளிப்படுத்துகை முகவரியிட்டனுப்பப்படுகின்றதோ அந்த வங்கியானது விலக்களிக்கப்பட்டதாகக் கணக்கு வைத்திருப்பவரால் இனங்காணப்பட்ட பற்றுக்களின் தொகையை வங்கியின் பதிவேடுகளுடன் சரிபார்த்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய விலக்களிக்கப்பட்ட பற்றுக்களின் மீதான பற்றுக்கள் வரியை மீளளித்தலும் வேண்டும் ஆயினும், அத்தகைய பற்றுக்கள் வரியானது கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து முன்னரே மீளப்பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் மீளளிப்புக்களாக செலுத்தப்படற்பாலன வான எல்லாப் பணத்தொகைகளும் விடயத்திற்கேற்ப, வர்த்தக வங்கியால், விசேட வங்கியால், நிதிக் கம்பெனியால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியால் ஒன்றில் அத்தகைய வங்கியின், கம்பெனியின் அல்லது வியாபாரியின் நிதியங்களிலிருந்து, அன்றேல் ஆணையாளர் தலைமையதிபதியால் திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

விலக்களிப்புக்கள்.

**13.** (1) பற்றுக்கள் வரியிலிருந்து –

(அ) இலங்கை அரசாங்கத்தினால், இலங்கை மத்திய வங்கியால், ஏதேனும் மாகாண சபையால், ஏதேனும் உள்ளூரதிகார சபையால், ஏதேனும் வெளிநாட்டுரசாங்கத்தினால், 1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, தூதரகச் சிறப்புரிமைகள் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகும் ஏதேனும் அரசின் தூதரகத்தால் அல்லது ஏதேனும் ஒழுங்கமைப்பால் அல்லது அத்தகைய தூதரகத்தின் அல்லது ஒழுங்கமைப்பின் எவரேனும் தூதரக ஆளணியினரால் அல்லது கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளையின் மூலம் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் சர்வதேச அல்லது வெளிநாட்டு ஒழுங்கமைப்பால் பேணப்படும் ஏதேனும் நடைமுறைக் கணக்கிலிருந்து செய்யப்பட்ட பற்றுக்கள் ;

(ஆ) வர்த்தக வங்கியொன்றில் எவரேனும் ஆளினால் ஏதேனும் நடைமுறைக்கணக்கு –

(i) திறைசேரியின் பிரதிச் செயலாளருக்கு ஏதேனும் கடன் தொகையின் அல்லது அதன் மீதான வட்டியின் கொடுப்பனவை ;

(ii) உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதிக்கு ஏதேனும் வரியின் கொடுப்பனவை ;

(iii) சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு வரியின், தீர்வையின், விதிப்பனவின் அல்லது அறவீட்டின் கொடுப்பனவை ;

(iv) மது வரி ஆணையாளருக்கு அல்லது மது வரிப்பணிப்பாளர் தலைமையதிபதிக்கு ஏதேனும் வரியின் அல்லது தீர்வையின் கொடுப்பனவை அல்லது ;

(v) கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளையின் மூலம் அமைச்சரினால் அங்கீகரிக்கப்படக் கூடியவாறான வேறு ஏதேனும் கொடுப்பனவை,

செய்யும் நோக்கத்திற்காக மாத்திரமே ஆனது என, கணக்கு வைத்திருப்பவரால் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையொன்றினதும் மற்றும் பொறுப்பேற்பு ஒன்றினதும் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட விசேட கணக்கொன்றாகிய ஏதேனும் நடைமுறைக் கணக்கிலிருந்து செய்யப்பட்ட பற்றுக்கள் ;

(இ) இதன் கீழ்க் குறித்துரைக்கப்பட்ட எவரேனும் ஆளினால் வர்த்தக வங்கியொன்றில் விசேட கணக்கொன்றாயிருக்கும் ஏதேனும் நடைமுறைக் கணக்கிலிருந்து செய்யப்பட்ட பற்றுக்கள், அத்தகைய கணக்கை வைத்திருப்பவரால் செய்யப்பட்ட பின்வரும் நோக்கத்திற்காக மட்டுமே அத்தகைய கணக்கானது வைத்திருக்கப்படுகின்றதென்ற வெளிப்படுத்துகை யொன்றினதும் அத்துடன் பொறுப்பேற்பு ஒன்றினதும் அடிப்படையில் —

(i) ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் போன்ற ஏதேனும் நிதியத்திலிருந்து அல்லது திட்டத்திலிருந்து அல்லது ஊழிய சேமலாப நிதியச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியத்திலிருந்து அல்லது உதவு தொகை செலுத்தும் ஓய்வூதியத் திட்டத்திலிருந்து அல்லது பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட உதவு தொகை செலுத்தாத ஓய்வூதிய திட்டத்திலிருந்து உதவுதொகை செலுத்தும் உயிர்வாழ்வோரின் ஓய்வூதியத் திட்டத்திலிருந்து உதவு தொகை செலுத்துநர்களுக்கு நலன் களைக் குறிக்கும் கொடுப்பனவுகளைச் செய்யும் ;

(ii) உரிமம்பெற்ற விளைபொருள் தரகர் ஒருவரினாற் செய்யப்பட்ட, வாடிக்கையாளர்களுக்காகவும் அவர்களின் சார்பிலும் உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான கொடுப்பனவுகளையும் அத்துடன் அத்தகைய உணவுப் பொருட்களின் விற்பனை வரும்படிகளின் அனுப்பு தொகையைக் குறிக்கின்ற கொடுப்பனவுகளையும் செய்யும் ;

(iii) முதனிலை விற்பனையாளரொருவரினாற் செய்யப்பட்ட அரசாங்கப் பிணையங்களிலான வியாபாரம் தொடர்பான கொடுப்பனவுகளைச் செய்யும் ;

(iv) ஒரு முதனிலை விற்பனையாளரினால் அல்லது ஒரு வர்த்தக வங்கியினால், ஒரு நிதிக் கம்பனியால், உரிமம்பெற்ற ஒரு நிதிக் குத்தகைக் கம்பனியினால் அல்லது ஒரு வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனியினால் அல்லது ஓராளினால் அல்லது ஆட்கள் குழுவினால் செய்யப்பட்ட, இரண்டாம் நிலைச் சந்தையில் (அரசாங்க மற்றும் கூட்டிணைப்பு) கடன் பிணையங்கள் எல்லாவற்றினதும் நேரடியான (விற்பனைகளும் கொள்வனவுகளும்) அத்துடன் மீள் கொள்வனவு மற்றும் எதிர்மாறான மீள்கொள்வனவுகளின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான கொடுப்பனவுகளைச் செய்யும் ;

(v) உரிமம்பெற்ற பங்குத்தொகுதித் தரகர் ஒருவரினால் அல்லது ஒரு வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனியினால் அல்லது ஓராளினால் அல்லது ஆட்கள் குழுவினால் வாடிக்கையாளரொருவர் சார்பில் கொழும்புப் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையில் நிறைவேற்றப்பட்ட கொடுக்கல் வாங்கல்களைக் கொடுத்துத் தீர்த்தல் தொடர்பான கொடுப்பனவுகளைச் செய்யும் ;

(vi) கடல்கடந்த வெளிநாட்டு வங்கித் தொழில் நிறுவனமொன்றிலிருந்து அக்கணக்குக்கு கைமாற்றப்படும் நிதிகளைப் பயன்படுத்தும் எவரேனும் வதிவுள்ள தனியாட்களுக்கான கொடுப்பனவுகளைச் செய்யும் ;

(vii) ஒரு வர்த்தக வங்கியில் இன்னொரு வர்த்தக வங்கியினால், விசேட வங்கியினால், உரிமம்பெற்ற நிதிக் குத்தகைக் கம்பனியினால் அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு நிதிசார் இடை வருநரினாற் பேணப்படும் அத்தகைய ஏதேனும் கணக்கிலிருந்தான கொடுப்பனவுகளைச் செய்யும், அவையாவன —

(அ) வர்த்தக வங்களின் விடயத்தில், வங்கித் தொழிற்சட்டத்தின் 11 ஆம் அட்டவணையின் (ச), (ஞ), (ம), (ர) என்ற விடயங்களைத் தவிர, அத்தகைய அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறான செயற்பாடுகள் சம்பந்தமாகவும், அத்தகைய செயற்பாடுகளிலிருந்து எழுகின்ற, வட்டியும் முதலும் ஆன நிதிக்கடப்பாடுகளைக் கொடுத்துத் தீர்த்தல் சம்பந்தமாகவும் செய்யப்பட்ட பற்றுக்களாகவிருக்கும் ;

ஆயின், எவ்வாறாயினும், வங்கித் தொழிற் சட்டத்தின் 11 ஆம் அட்டவணையின் (ப) என்ற விடயத்தில் வழங்கப்பட்ட விலக்களிப்பானது தரகுவணிகச் செயற்பாடுகள் தொடர்பாக மட்டுமே ஏற்புடையப்படற்பாலதாதல் வேண்டும் ;

(ஆ) வங்கித்தொழிற் சட்டத்தின் iv ஆம் அட்டவணையின் (ஐஐ), (ஓஓ), (ஔஔ), (கக) அத்துடன் (ஙங) என்ற விடயங்கள் தவிர, அத்தகைய அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறான செயற்பாடுகள் சம்பந்தமாகவும், விசேட வங்கியின் விடயத்தில் அத்தகைய செயற்பாடுகளிலிருந்து எழுகின்ற, முதலும்

வட்டியும் ஆன நிதிசார் கடப்பாடு களைக் கொடுத்துத்தீர்த்தல் சம்பந்த மாகவும் செய்யப்பட்ட பற்றுக்களாக விருக்கும் ; அல்லது

(இ) உரிமம்பெற்ற நிதிக் குத்தகைக் கம்பனிகளின் அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக் கப்பட்ட வேறெவையேனும் நிதிசார் இடைவருநர்களின் விடயத்தில் இடை வருகைச் செயற்பாடுகள் சம்பந்த மாகவும், அத்தகைய செயற்பாடு களிலிருந்து எழுகின்ற, வட்டியும் முதலும் ஆன நிதிசார் கடப்பாடுகளைக் கொடுத்துத்தீர்த்தல் சம்பந்தமாகவும் செய்யப்படும் பற்றுக்களாகவிருக்கும் ; ஆயின், மேலே (அ), (ஆ) என்னும் பந்திகளில் தரப்பட்டுள்ள விதிவிலக்கு களிலிருந்து தவிர்க்கப்பட்ட ஒரு வர்த்தக வங்கியின் அல்லது ஒரு விசேட வங்கியின் உரிமம் பெற்ற செயற்பாடுகள் தொடர்பான பற்றுக் கள், உரிமம்பெற்ற ஒரு நிதிக் குத்தகைக் கம்பனிக்கும் அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப் பட்ட ஒரு நிதிசார் இடைவருநருக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும். (இப் பந்தியின் நோக்கங்களுக்காகச் செயற் பாடொன்று நிதிசார் இடை வருகை யாகவுள்ளதாவென் பதைத் தீர்மானிப் பதில் திறைசேரிப் பிரதிச் செயலாளர் இறுதி அதிகாரியாவார்).

(viii) நிதிகளைப் பெறுகின்ற அத்துடன் நிதிகள் கைமாற்றப்படுவதனை வசதிப்படுத்துகின்ற நோக்கங்களுக்காக மட்டுமே, ஒரு சேகரிப்புக் கணக்காக ஏதேனும் வர்த்தக வங்கியில் எவரேனுமாளினால் பேணப்பட அத்தகைய ஏதேனும் கணக்கிலிருந்து, அத்தகைய ஆளினால் வேறு கிளைகளில் அல்லது அத்தகைய வங்கியின் தலைமையலுவலகத் தில் பேணப்படுகின்ற கணக்குகளுக்குச் செய்யப்பட்டதாகவிருக்கும் ;

(ஈ) பின்வருவன தொடர்பாகக் கணக்குவைத்திருப்பவர் ஒருவரின் ஏதேனும் நடைமுறைக் கணக்கிலிருந்து செய்யப்பட்ட பற்றுக்கள் :—

(i) ஒரே கணக்கு வைத்திருப்பவரின் பெயரில் பேணப்படுகின்ற, அதே வங்கியில் அல்லது வேறேதேனும் ஒரு வர்த்தக வங்கியில் அக் கணக்கிலிருந்து இன்னொரு நடைமுறைக் கணக்குக்கு நிதிகளைக் கைமாற்றுவதனைக் குறிக்கின்ற, வர்த்தக வங்கியில் வைத்திருக்கப்படும் அத்தகைய கணக்கிலிருந்து செய்யப்பட்ட பற்றுக்கள் ;

(ii) பற்றுக்கள் வரியைச் செலுத்துவதற்காக அக்கணக்கிலிருந்து மீளப்பெறப்பட்ட பணத்தொகைகள் தொடர்பில் அத்தகைய கணக்கிலிருந்து செய்யப்பட்ட பற்றுக்கள் ;

(iii) கணக்கு வைத்திருப்பவரினால் நிதிகள், மீளப்பெறப்பட்டமையைக் குறிக்காத பணம் கொடுக்கப்படாத காசோலைகள், பிழைதிருத்துங்கள் அல்லது வரவுப் பதிவிடுகள் தொடர்பில் செய்யப்பட்ட பற்றுக்கள் ;

(உ) பின்வருவன தொடர்பாக ஏதேனும் நடைமுறைக் கணக்கிலிருந்து செய்யப்பட்ட பற்றுக்கள் :—

(i) அவ்வங்கியின், இலங்கையிலுள்ள ஒரு கிளையில் பேணப்படுகின்றவாறான வர்த்தக வங்கியொன்றின் இலங்கையிலுள்ள தலைமையலுவலகத்தின் கணக்கு ;

(ii) அவ்வங்கியின், இலங்கையிலுள்ள தலைமையலுவலகத்தில் பேணப்படுகின்றவாறான வர்த்தக வங்கியொன்றின் இலங்கையிலுள்ள கிளையொன்றின் கணக்கு ;

(iii) அவ்வங்கியின், இலங்கையிலுள்ள இன்னொரு கிளையில் பேணப்படுகின்றவாறான வர்த்தக வங்கியொன்றின் இலங்கையிலுள்ள கணக்கு ;

(ஊ) தேசியப் பொருளாதாரத்தின் நலன் கருதி. கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப் படக்கூடியவாறான நடைமுறைக் கணக்கிலிருந்து செய்யப்பட்ட அத்தகைய வேறு கணக்குகள். பற்றுக்கள் அல்லது வகுப்பினவான பற்றுகள் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) பந்தி (ஈ) இன் (i). (ii). (iii) ஆகிய உட்பந்திகளிற் குறித்துரைக்கப்படுகின்ற விலக்களிப்புகளுக்காகத் தகைமை பெறுவதற்கு. கணக்குவைத்திருப்பவர். முற்போந்த பஞ்சாங்க மாதத்தில் அத்தகைய கணக்கு வைத்திருப்பவரின் ஏதேனும் நடைமுறைக் கணக்குக்குச் செய்யப்பட்ட விலக்களிக்கப்பட்ட பற்றுக்கள் தொடர்பில். மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்குமுன்னர் ஆணையாளர் தலைமையதிபதியினால் விதித்துரைக்கப்பட வேண்டிய ஒரு படிவத்தில். வர்த்தக வங்கிக்கு ஒரு வெளிப்படுத்துகையைக் கொடுத்துதவுதல் வேண்டும் :

ஆயினும். எவ்வாறாயினும். பதினைந்தாம் நாள் வேலை நாளல்லாத நாளொன்றில் வருமாயின் அத்தகைய வெளிப் படுத்துகையானது அதன்பின்னரான முதலாவது வேலை நாளன்று செய்யப்படுதல் வேண்டும்.

(3) கணக்கு வைத்திருப்பவர் ஒருவர் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் வெளிப்படுத்துகை யொன்றைக் கொடுத்துதவத் தவறுமிடத்து. அத்தகைய ஆள் பற்றுக்கள் வரியின் கொடுப்பனவுத் தேதியிலிருந்து பன்னிரண்டு மாதங்களைக் கொண்ட வொரு காலப்பகுதிக்குள் ஆணையாளர் தலைமையதிபதியிடமிருந்து மீளளிப்புக்கு விண்ணப்பிக்கலாம். ஆயினும் அத்தகைய உரிமைக் கோரிக்கை எழுத்தில் இருத்தலும். அத்துடன் மீளளிப்பானது விலக்களிக்கப்பட்ட பற்றொன்றின் மீதான பற்றுக்கள் வரிதொடர்பிலானது என்ற நிகழ்வை எண் பிப்பதற்கு ஆணையாளர் தலைமையதிபதியால் ஏற்றுக்கொள்ளப் படக்கூடிய சான்று கொடுத்துதவப்படுதலும் வேண்டும்.

(4) ஒரு வர்த்தக வங்கியானது சேமிப்புக் கணக்கொன்றை அல்லது விசேட கணக்கொன்றை ஆரம்பிப்பதன்மீது, அத்தகைய கணக்கு ஆரம்பிக்கப்பட்ட மாதத்தை அடுத்துவரும் பஞ்சாங்க மாதத்தின் கடைசி வேலை நாளன்று அல்லது அதற்குமுன்னர், எந்த பெயரில் அல்லது ஆட்களின் பெயர்களில் கணக்குகள் பேணப்படுகின்றனவோ அந்த ஆளின் அல்லது ஆட்களின் பெயரையும் முகவரியையும் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும். வெளிப்படுத்துகையினதும் மற்றும் அத்தகைய ஆளினால் தரப்பட்ட பொறுப்பேற்பினதும் பிரதியொன்றும் அனுப்பப்படுதல் வேண்டும்.

(5) ஐயப்பாடுகளைத் தவிர்ப்பதற்கென, எந்த ஆளின் நடைமுறைக் கணக்கிலுள்ள பற்றுக்கள் (அ) என்னும் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு முற்றாக விலக்களிக்கப்படுகின்றனவோ அந்த ஆளின் விடயத்திற் தவிர, ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்வதற்கான அல்லது ஏதேனும் கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான செலவு போன்ற மூலதன இயல்பினதான செலவுகள் உட்பட வேறு செலவுகளை ஈடுசெய்வதற்கென ஒரு வர்த்தக வங்கியால், விசேட வங்கியால், உரிமம்பெற்ற நிதிக் குத்தகைக் கம்பனியால் (ஆ), (இ), (ஈ), (உ) அத்துடன் (ஊ) என்னும் பந்திகளின்கீழ்க் குறித்துரைக்கப்பட்ட நிதியியல் இடைவருநரால் அல்லது வேறு எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட கொடுப்பனவுகளுக்கு (ஆ), (இ), (ஈ), (உ) அத்துடன் (ஊ), என்னும் பந்திகளின்கீழ் அளிக்கப்பட்ட விலக்களிப்புக்கள் ஏற்புடையதாதல் ஆகாது என்று இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :

ஆயினும், எவ்வாறாயினும் வர்த்தக வங்கிகள், விசேட வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் குத்தகைக் கம்பனிகள், அத்துடன் (இ) (vii) என்னும் பந்தியின் நியதிகளின்படி ஆணையாளர் தலைமையதிபதியால் அங்கீகரிக்கப்பட்ட வேறு நிதியியல் இடைவருநர்கள் ஆகியவற்றின் விடயத்தில், விலக்களிப்பு அளிக்கப்பெற்ற நிதியியல் இடைவருகைச் செயற்பாடு தொடர்பிலான பொறுப்பொன்றிற்கான ஏதேனும் வட்டிக் கொடுப்பனவு பற்றுக்கள் வரியிலிருந்து புறந்தள்ளப்படுதல் வேண்டும்.

14. (1) ஆணையாளர் தலைமையதிபதியால் அதன் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் எழுத்திலான அறிவித்தலின்மூலம் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்படுகின்றனவா அல்லது இணங்கியொழுகப்பட்டுள்ளனவா என ஆய்ந்தறியும் நோக்கங்களுக்கு அவசியமாகக்கூடியவாறான

இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்துவதற்கான தத்துவம்.

அத்தகைய விவரத்திரட்டுக்களையும் தகவலையும் கொடுத்துதவுமாறு ஒரு வர்த்தக வங்கியை, விசேட வங்கியை, நிதிக் கம்பெனியை அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியைத் தேவைப்படுத்தலாம் என்பதுடன், அத்தகைய வங்கியால், நிதிக் கம்பெனியால் அல்லது வியாபாரியால் பேணப்படும் எவையேனும் புத்தகங்களில், பதிவேடுகளில் அல்லது வேறு ஆவணங்களில் உள்ள எவையேனும் பதிவுகளைப் பரிசீலனை செய்யலாம் என்பதுடன் அவற்றைப் பிரதியும்பண்ணலாம்.

(2) சட்டத்தில் முரணாக உள்ளது, எது எவ்வாறிருப்பினும், ஒவ்வொரு வர்த்தக வங்கியும், விசேட வங்கியும், நிதிக் கம்பெனியும் அத்துடன் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியும் (1) ஆம் உட்பிரிவின் கீழ் சுமத்தப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வங்கியால், நிதிக் கம்பெனியால் அல்லது வியாபாரியால் பேணப்படும் எவையேனும் புத்தகங்களை, பதிவேடுகளை அல்லது வேறு ஆவணங்களைப் பரிசீலனை செய்வதற்கு அவசியமாகின்றவாறான அத்தகைய எல்லா வசதிகளையும் அவ்வுட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அலுவலருக்கு வழங்குதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அலுவலர் ஒருவர் இச்சட்டத்தின்கீழ் அவரது கடமைகளைப் புரிகையில் அவரது அறிவுக்கு எட்டக்கூடியதான ஏதேனும் வர்த்தக வங்கியின், விசேட வங்கியின், நிதிக் கம்பெனியின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியின் விவகாரங்கள் பற்றிய எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் இரகசியத்தைப் பேணுதலும், பேணுதலின் உதவுதலும் வேண்டும் என்பதுடன், திறைசேரியின் பிரதிச் செயலாளருக்கு, ஆணையாளர் தலைமையதிபதிக்கு அல்லது ஒரு நீதிமன்றத்திற்குத் தவிர அத்தகைய ஏதேனும் கருமத்தைத் தெரிவித்தலுமாகாது.

தவறுகள்.

**15.** (1) ஏதேனும் வர்த்தக வங்கி, விசேட வங்கி, நிதிக் கம்பெனி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி –

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எதற்கும் அல்லது இச்சட்டத்தின் கீழ்ச் சுமத்தப்பட்ட தேவைப்பாடு எதற்கும் அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி எதற்கும் இணங்கியொழுகத் தவறுமிடத்து, அல்லது, அதனை மீறுகின்றவிடத்து ;

(ஆ) அத்தகைய வர்த்தக வங்கியால், விசேட வங்கியால், நிதிக் கம்பெனியால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விவரத்திரட்டில் அல்லது தகவலில், அறிந்திருந்தும் ஏதேனும் பொய்யான கூற்றுக்களைச் செய்யுமிடத்து அல்லது அதிலிருந்து ஏதேனும் முக்கியமான விவரத்தை விட்டுவிடுகின்றவிடத்து, விடயத்திற்கேற்ப, அவ்வங்கி, அல்லது நிதிக் கம்பெனி அல்லது அந்த அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி இச்சட்டத்தின்கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னிலையில் சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது, பத்து இலட்சம் ரூபாவை விஞ்சாததொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும் :

ஆயினும், எவ்வாறாயினும், ஆணையாளர் தலைமையதிபதி பத்து இலட்சம் ரூபாவை விஞ்சாத தண்டப் பணமொன்றை விதிப்பதன்மூலம் தவறை இணக்கலாம். இத்தண்டப்பணம் திரட்டு நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(2) வர்த்தக வங்கியொன்றில் கணக்கொன்றை வைத்திருக்கையில் பொய் வெளிப்படுத்துகையொன்றின் அடிப்படையில் சேகரிப்பு அல்லது விசேட நடைமுறைக் கணக்கு ஒன்றை ஆரம்பிக்கும் அல்லது நடைமுறைக் கணக்கை ஆரம்பிக்கும் நேரத்தில் கொடுத்துதவப்பட்ட பொறுப்பேற்பொன்றை மீறிச் செல்லப்படுகின்ற ஆளெவரும், இச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல் வழங்கப்படுவதன்மீது பத்து இலட்சம் ரூபாவை விஞ்சாத பணத்தொகையொன்றையும், அத்துடன் அத்தகைய செயற்பாட்டின் விளைவாக அறவிடப்படாத பற்றுக்கள் வரித்தொகையின் இரு மடங்கையும் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

(3) பதினான்காம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவை மீறுகின்ற ஒவ்வோராளும் இச்சட்டத்தின்கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னிலையில்

சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது, ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாததொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாததொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

ஒழுங்குவிதிகள்.

**16.** (1) அமைச்சரானவர், இச்சட்டத்தின் கோட்பாடுகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் பயனளிக்கும் நோக்கத்துக்காகவும் அத்துடன் விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட கருமங்கள் தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அத்தகைய ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது கசெற்றில் வெளியிடப்பட்டதன்பின்னர் சாத்தியப்படக்கூடியளவு விரைவில் அங்கீகாரத்திற்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதனதும் செல்லுபடியாகுந்தன்மைக்குப் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அத்தகைய ஒழுங்குவிதி எத்தேதியில் இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்பட்டதோ அத்தேதி பற்றிய அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

கடந்தகாலத்தை உள்ளடக்கும் பயன்.

**17.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எல்லா நோக்கங்களுக்குமாகவும் 2002 யூன் 1 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

நட்டோத்தரவாதம்.

**18.** (1) 2002 யூன் 1 ஆம் தேதியன்று தொடக்கம் இச்சட்டம் பாராளுமன்றச் சட்டமொன்றாக நிறைவேற்றப்படும் தேதியன்று வரைக்குமான காலப்பகுதியின்போது, 6 ஆம் பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு பற்றுக்கள் வரியை சேகரிக்கின்ற அல்லது அனுப்புகின்ற எதேனும் வர்த்தக வங்கி, விசே

வங்கி, நிதிக் கம்பெனி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி உரிய அதிகாரத்துடன் செயற்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய சேகரிப்புத் தொடர்பில் ஏதேனும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கிலிருந்து அதற்கு அல்லது அவருக்கெதிராக நட்டோத்தரவாதமும் அளிக்கப்படுகின்றது.

(2) எவரேனும் ஆளிடமிருந்து அவரால் பேணப்படும் நடைமுறைக் கணக்கொன்றிலிருந்தான பற்றுக்கள் தொடர்பில் அல்லது வைப்புச் சான்றிதழ் அல்லது பிரயாணிகளின் காசோலை ஒன்றைக் காசாக மாற்றுவதன் மூலம் அவருக்குத் தேறிய ஏதேனும் தொகை தொடர்பில் அவர் செலுத்துவதற்கானதாக இருந்த தொகையை விஞ்சிய பற்றுக்கள் வரியை அவரிடமிருந்து சேகரிக்கின்ற ஏதேனும் வர்த்தக வங்கிக்கு விசேட வங்கிக்கு, நிதிக் கம்பெனிக்கு அல்லது 13 ஆம் பிரிவால் அல்லது அதன்கீழ் பற்றுக்கள் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டவாறு வங்கியொன்றில் அவரால் பேணப்படும் நடைமுறைக் கணக்கொன்றிலிருந்து செய்யப்பட்ட எவையேனும் அத்தகைய பற்றுக்களின்மீது பற்றுக்கள் வரியைச் சேகரிக்கின்ற ஏதேனும் வர்த்தக வங்கிக்கு விடயத்திற்கேற்ப, 2002 யூன் 1 ஆம் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் அத்தகைய தொகை மீளளிப்புச் செய்யப்படுகின்ற தேதியிலிருந்தும் அதன் பின்வரும் அல்லது அத்தகைய தொகை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்பட்ட தேதியிலிருந்தும் அதன் பின்னரும் அத்தகைய சேகரிப்புத் தொடர்பில் ஏதேனும் குடியியல் அல்லது குற்றவியல் தொடர்ச்சியிலிருந்து இத்தால் நட்டோத்தரவாதமளிக்கப்படுகின்றது.

19. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி — பொருள்கோடல்.

"வங்கித்தொழிற் சட்டம்" என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டம் என்று பொருள்படும் ;

"சேகரிப்புக் கணக்கு" என்பது வர்த்தக வங்கியொன்றுடன் பேணப்படும் நிதியை மாற்றுவதற்கு வசதியளிக்கும் ஒரு கணக்கு என்று பொருள்படும் ; ஆனால் அதன்மீது காசோலையை வரைய முடியாது ;

"வர்த்தக வங்கி" என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழிற் சட்டத்தின் கருத்தெல்லைக் குட்பட்ட உரிமமளிக்கப்பட்ட ஒரு வர்த்தக வங்கி என்று பொருள்படும் ;

"ஆணையாளர் தலைமையதிபதி" என்பது, 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி என்று பொருள்படும் ;

"நடைமுறைக் கணக்கு" என்பது —

(அ) (ஒரு சேமிப்புக் கணக்கு, ஒரு வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, ஒரு வதிவுள்ளோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வெளிநாட்டு நாணய வங்கித் தொழிற் கூறிலுள்ள ஒரு கணக்கு அத்துடன் ஒரு பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு என்பவற்றைத் தவிர) வரவிலிருப்பினுஞ்சரி வேறுவகையாயிருப்பினுஞ்சரி, வர்த்தக வங்கியொன்றில், ஏதேனும் அத்தகைய வங்கி உட்பட எவரேனும் ஆளுக்காக அல்லது ஆட்களுக்காக அத்துடன் பேணப்படுவதும் அத்தகைய ஆளினால் அல்லது ஆட்களினால் காசோலை, உண்டியல், கட்டளை அல்லது வேறு அறிவுறுத்துதல் மூலம் கொடுப்பனவுகள் செய்யப்படுவதுமான ஒரு கணக்கு எனவும் ; அத்துடன்

(ஆ) வர்த்தக வங்கியொன்றின் —

(i) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்வதற்கான அல்லது ஏதேனும் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான செலவு போன்ற அத்தகைய மூலதன இயல்பினதான செலவுகளும் ; மற்றும்

(ii) கொடுப்பனவொன்றை ஈடுபடுத்துவனவும் அத்துடன் உள்ளகரீதியிலாயினுஞ்சரி வெளிப்புறரீதியிலாயினுஞ்சரி எச்செலவுகள் தொடர்பில் பற்றுக்கள் செய்யப்படுகின்றனவோ அத்தகைய செலவுகளுமான

எல்லாத் தொழிற் செலவுகளும் உட்பட அத்தகைய வங்கியின் எவையேனும் செலவுகளை ஈடுசெய்வதற்கென அத்தகைய வங்கியின் எந்த உள்ளகக் கணக்கிலிருந்து கொடுப்பனவு செய்யப்படுகின்றனவோ அந்த உள்ளகக் கணக்கொன்று எனவும்.

பொருள்படும் ;

"பற்று" என்பது எவரேனும் ஆளின் அல்லது ஆட்களின் நடைமுறைக் கணக்கொன்றுக்கு எதிராக அக்கணக்கிலிருந்து அவ்வாளின் அல்லது ஆட்களின் காசோலை, உண்டியல், கட்டளை, அல்லது வேறு ஏதேனும் அறிவுறுத்துதல்மூலம் நிதி மீளப்பெறப்படுவது தொடர்பில் செய்யப்படும் பதிவு என்று பொருள்படுவதுடன், வர்த்தக வங்கியொன்றால் அவ்வங்கியின் கணக்கொன்றின்மீது தொழில் நெறிமுறையின்போது செய்யப்படும் அறவீடுகளையும் உள்ளடக்கும் ;

"ஊழியர் சேமலாப நிதியம்" என்பது 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதியம் என்று பொருள்படும் ;

"ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்" என்பது 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்று பொருள்படும் ;

"நிதிக் கம்பெனி" என்பது நிதித் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காக 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக் கம்பெனிகள் சட்டத்தின்கீழ்ப் பதிவுசெய்யப்பட்ட ஒரு கம்பெனி என்று பொருள்படும் ;

"வெளிநாட்டு நாணய வங்கிக் கணக்கு" என்பது வர்த்தக வங்கியொன்றில் பேணப்படுவதும் மத்திய வங்கியால் அவ்வாறு குறித்தொதுக்கப்பட்டதுமான ஒரு கணக்கு என்று பொருள்படும் ;

"உரிமம்பெற்ற நிதிக் குத்தகைக் கம்பெனி" என்பது 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, நிதிக் குத்தகைச் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்டவொரு கம்பெனி என்று பொருள்படும் ;

"உரிமம்பெற்ற பங்குத்தொகுதித் தரகர்" என்பது 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட ஒரு பங்குத் தொகுதித் தரகர் என்று பொருள்படும் ;

"உரிமம்பெற்ற விளைபொருள் தரகர்" என்பது 1979 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, விளைபொருள் தரகர்களுக்கு உரிமமளித்தற் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட ஒரு விளைபொருள் தரகர் என்று பொருள்படும் ;

"வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு" என்பது வர்த்தக வங்கியொன்றில் பேணப்படுவதும் மத்திய வங்கியால் அவ்வாறு குறித்தொதுக்கப்பட்டதுமான ஒரு கணக்கு என்று பொருள்படும் ;

"பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டம்" என்பது 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டம் என்று பொருள்படும் ;

"வதிவுள்ளோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு" என்பது வர்த்தக வங்கியொன்றில் பேணப்படுவதும் மத்திய வங்கியால் அவ்வாறு குறித்தொதுக்கப்பட்டதுமான ஒரு கணக்கு என்று பொருள்படும் ;

"சேமிப்புக் கணக்கு" என்பது வர்த்தக வங்கியொன்றில் பேணப்படும் நிதிக் கணக்கொன்று என்று பொருள்படுவதுடன், இதில் வைப்பீடு செய்யப்படும் நிதி, வட்டி ஈட்டும் அத்துடன் இதிலிருந்து நிதி மீளப்பெறுகைகளை வங்கியால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய இடைக்காலங்களின் பின்னரோ அல்லது குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதிகளுக்கமையவோ செய்யலாம் ;

"விசேட வங்கி" என்பது 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழிற் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி ஒன்று என்று பொருள்படும்.

ஒவ்வாமையின் விடயத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**20.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1.387: (வெளிநாடு) ரூபா 1.849 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, டிரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.